
தேவனுடைய சமுகத்தில் வரும் எந்த மனிதனும், அந்த நிமிடம் முதற்கொண்டு அதை வேறொருவரிடம் சொல்ல தேவனுக்கு முன்பாக பொறுப்புள்ளவனாயிருக்கிறான்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்




**மத்தேயு 5:16**

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

---

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 62-09-09E அவருடைய சமுகத்தில்

---

33. நாம் சென்று ஸ்தாபனங்களை உண்டாக்க வேண்டுமென்று அவர் நம்மை நியமிக்கவில்லை. நாம் சென்று கோட்பாடுகளை உண்டாக்க வேண்டுமென்று அவர் நம்மை நியமிக்கவில்லை. அவைகளுக்கு விரோதமாக அவர் நம்மை

எச்சரித்திருக்கிறார். இதனுடன் எதையாகிலும் கூட்டினால், அவனுடைய பங்கு ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுத்து போடப்படும். பாருங்கள்?

எனவே நாம் அந்த வார்த்தையில் நிலைத்திருப்பதைத் தவிர வேறொன்றையும் செய்ய நியமிக்கப்படவில்லை. ஒரு மனிதன் தேவனால் அனுப்பப்பட்டிருந்தால், அவன் வார்த்தையில் நிலைத்திருப்பான், ஏனெனில் தேவன் தமது வார்தையை மாத்திரமே ஆதரிக்க முடியும். பாருங்கள். பாருங்கள், அவர் தமது வார்த்தையுடன் தங்கியிருக்க வேண்டும். அப்படியானால் நாம் அவருடைய சமுகத்தில் வரும்போது, ஒரு மனிதன் ஒருமுறை தேவனுடைய சமுகத்தில் வருவானானால், அவன் என்றென்றைக்கும் மாறிவிடுகிறான் - அவனிடத்தில் மாற வேண்டியவைகள் இருக்குமானால். சிலர் தேவனுடைய சமுகத்தில் நடந்து வந்து, அதைக் குறித்து கவனம் செலுத்தாமல் இருக்கலாம். அப்படியானால் அவன் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்படவில்லை.

ஆனால் அவன் தேவனால் முன் குறிக்கப்பட்டிருந்தால், அந்த முதல் அசைவு தாக்கினவுடனே அவன் அதை அறிந்து கொள்கிறான். அது பற்றியெரியத் தொடங்குகிறது.



34. அந்த நாளில் சமாரியாவில் இருந்த அந்த சிறு வேசியை பாருங்கள். அவள் மனநிலை பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் மோசமான நிலையில் இருந்தாள். அது நமக்குத் தெரியும். ஆனால் அந்த மேசியாவின் அடையாளம் செய்யப்பட்டதை அவள் கண்டவுடன், அவள், "இதைச் செய்ய மேசியா வருகிறார் என்று அறிந்திருக்கிறேன். நீர் அவருடைய தீர்க்கதரிசியாயிருக்க வேண்டும்" என்றாள்.

அவர், "வருவார் என்று எழுதியிருக்கிற அந்த மேசியா நான் தான்" என்றார்.

அவள் அதை அடையாளம் கண்டு கொண்டாள். அவள் அதற்கு மேல் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. அவள் அந்த பொறுப்பைக் கொண்டவளாய் உடனே புறப்பட்டாள். அவள் அதை கண்டு கொண்டு தேவனுடைய சமுகத்தில் வந்திருப்பாளானால், அதைக் குறித்து வேறொருவரிடம் சொல்ல அவள்

பொறுப்புள்ளவளாய் இருக்கிறாள் என்பதை அறிந்திருந்தாள். அல்லேலுயா! உண்மை. தேவனுடைய சமுகத்தில் வரும் எந்த மனிதனும், அந்த நிமிடம் முதற்கொண்டு அதை வேறொருவரிடம் சொல்ல தேவனுக்கு முன்பாக பொறுப்புள்ளவனாயிருக்கிறான். ஆபிரகாமைப் பாருங்கள், மோசேயைப் பாருங்கள், பேதுருவைப் பாருங்கள், பவுலைப் பாருங்கள். அவர்கள் தேவனுடைய சமுகத்தில் வந்த மாத்திரத்தில், தாங்கள் “பாவிகள்” என்பதை உணர்ந்து தங்கள் சாட்சியை தங்கள் ஜீவனைக் கொண்டு முத்தரித்தனர்.

அந்த சிறு சமாரியப் பெண்ணைப் பாருங்கள், அவளால் அதற்கு மேல் சும்மா இருக்க முடியவில்லை, அவள் ஊருக்குள்ளே போய் ஜனங்களை நோக்கி , "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனிதன் எனக்குச் சொன்னார், அவரை வந்து பாருங்கள், அவர் மேசியாதானோ? என்றாள். அவர்களால் மறுக்க முடியவில்லை. ஏனெனில் அது வேதப் பூர்வமானது. நிச்சயமாக. ஆம்.

மோசே செய்தது போல, பேதுரு செய்தது போல, பவுல் செய்தது போல, நாமும் பொறுப்புடன் மற்றவர்களிடம் சொல்லும்போது, அவர்கள் அதை ஏற்றுகொள்ளத்தான் வேண்டும். நீங்கள் இதைக் கண்டு, தேவனுடைய சமுகத்தில் வந்த பிறகு, செய்தி மற்றவர்களுக்கு சொல்வதற்கு நீங்கள் பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் அதைப் பெற்றுக்கொண்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது. அதை வேறொருவரிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.



35. இங்கிருந்த ஒரு வயோதிப சகோதரியை எனக்கு ஞாபகம் வருகிறது. அவள் சகோ. கிரகாம் ஸ்நெல்லிங்கின் தாய். அவள் சபையில் உட்கார்ந்து கொண்டு, "நான் ஓடுகிறேன், ஓடுகிறேன், ஓடுகிறேன், இப்பொழுது தான் இந்த இடத்தை அடைந்தேன். என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை" என்று பாடுவது வழக்கம். அவள் அப்பொழுது தான் ஏதோ ஒன்றைக் கண்டு கொண்டாள். நான் லூயிவிலில்லிலுள்ள கறுப்பு மனிதரின் சபைக்கு சென்றிருந்தேன். அவர்கள் எல்லோரும் எழுந்து நின்று "நான் ராஜாவின் பெரும்பாதையில் ஓடிக் கொண்டேயிருந்து இப்பொழுது தான் அதை கண்டு கொண்டேன். நான் பெரும் பாதையில் ஓடினேன்" என்று பாடினார்கள்.

நீங்கள் கிறிஸ்துவைக் கண்டு கொள்ளும்போது அதில் ஏதோ ஒன்றுண்டு,

அதன் பிறகு நீங்கள் அமைதியாய் இருக்க முடியாது. எஞ்சியுள்ள உங்கள் வாழ்நாளில் நீங்கள் ஒரு மாறின நபராக இருப்பீர்கள். ஏனெனில் ஜீவனும் ஜீவனும் ஒன்று சேரும்போது அது பிரகாசமான ஒளியைத் தருகிறது. உண்மை. ஒரு மின்சார விளக்கு, மின்சாரக் கம்பியுடன் (wire) இணையும்போது, அது கெடாத விளக்காயிருந்தால் வெளிச்சத்தை தர வேண்டும். மின்சாரமும் விளக்கும் ஒன்று சேரும்போது, அது வெளிச்சத்தைப் பரப்புவதை தவிர வேறொன்றும் செய்வதில்லை. அது செய்தேயாக வேண்டும். அது போன்று, நித்திய ஜீவனுக்கென்று முன்குறிக்கப்பட்ட ஒரு மனிதன் அல்லது ஸ்திரீ, தேவனுடைய மின்சாரம் அந்த விளக்குடன் இணைவதைக் காணும்போது, அது எல்லாவிடங்களிலும் வெளிச்சத்தைப் பரப்பும். நீங்கள் 'பத்து வாட்' விளக்காக இருக்கலாம், ஆனால் உங்களுக்குள்ள வெளிச்சத்தை நீங்கள் பரப்புவீர்கள். நீங்கள் 'ஐந்நூறு வாட்? விளக்காக இல்லாமல்

போனால், பத்து வாட் வெளிச்சத்தைப் பரப்புங்கள். உங்கள் வெளிச்சத்தை தாருங்கள்! “மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலுள்ள உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது'' ஆம், ஐயா!

